**செய்தி வெளியீடு எண் : 1281** **நாள் : 29.07.2022**

**செய்தி வெளியீடு**

திருநங்கைகளுக்கான மிஸ் பன்னாட்டு அரசி 2022 (MISS International Queen 2022) போட்டி தாய்லாந்தில் நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திருநங்கை நமீதா மாரிமுத்து அவர்கள் கலந்து கொண்டு, முதல் 10 இடத்தில் இடம் பெற்றது மட்டுமல்லாமல், இறு போட்டியில் "MISS POPULAR VOTE OF THE WORLD" விருதினை பெற்றார். அவருக்கு தங்க கோப்பை விருதும், "SASHES" எனப்படும் அங்கி அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இந்த விருதியை பெறும் முதல் இந்தியர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

திருநங்கை நமீதா மாரிமுத்து அவர்கள் "MISS POPULAR VOTE OF THE WORLD-2022" விருதிற்காக பெற்ற தங்க கோப்பையினை இன்றைய தினம்(29.07.2022) மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் அவர்களிடம் தலைமைச் செயலகத்தில் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்வின் போது சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஷம்பு கல்லோலிக்கர், இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை இயக்குநர் திருமதி. த. ரத்னா, இ.ஆ.ப., சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநர் திருமதி. ச. வளர்மதி, இ.ஆ.ப., மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசு இணைச் செயலாளர் திருமதி. இரா. சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in